

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.2.2026) சென்னையில் நடைபெற்ற திரைப்படக் கலைஞர்கள் பொன்வண்ணன் – திருமதி சரண்யா பொன்வண்ணன் தம்பதியரின் மகள் டாக்டர் சாந்தினி – டாக்டர் டான் பிலிப் பாபு ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன் திருமதி துர்கா ஸ்டாலின் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (6.2.2026) தலைமைச் செயலகத்தில், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக பொதுச் செயலாளர் வைகோ அவர்கள் சந்தித்து, நாடாளுமன்றத்தில் வைகோ உரைகள் (Vaiko in Parliament – Rajya Sabha Upper House 1978–1996, 2019–2025. Lok Sabha Lower House 1998–2004) அடங்கிய தொகுப்பு நூல்கள் வெளியிடப்படவுள்ளதையொட்டி அணிந்துரை வழங்கிட நூல்களை வழங்கினார்.





## 10 மாவட்டங்களின் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்ஸ் வழங்கும் விழா:

# நான்கரை ஆண்டுகளில் மட்டும் திராவிட மாடல் அரசு 141 மினி ஸ்டேடியங்கள் கட்டி முடித்து சாதனை!

### திருச்சி, ஜமால் முகமது கல்லூரியில் நடைபெற்ற விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

திருச்சி,பிப்.7-

**திருச்சி, ஜமால் முகமது கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற விழாவில், 10 மாவட்டங்களில் உள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு வார்டு பிரதிநிதிகளுக்கு கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்ஸ்'களை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கி வாழ்த்திப் பேசினார்.**

**அப்போது அவர், ``திராவிட மாடல் அரசு அமைந்த பிறகு, இந்த நான்கரை ஆண்டுகளில் மட்டும், தமிழ்நாடு முழுவதும் 141 மினி ஸ்டேடியங்களைக் கட்டி முடித்து சாதனை படைத்திருக்கிறது” என்று குறிப்பிட்டார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய வாழ்த்துரை வருமாறு:**

இன்றைக்கு திருச்சி உள்ளிட்ட 10 மாவட்டங்களில் உள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு `கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்' வழங்குகின்ற திட்டத்தில், உங்களுக்கெல்லாம் இந்த ஸ்போர்ட்ஸ் கிட்டை வழங்கி, உங்களையெல்லாம் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

சென்ற மாதம் இதே திருச்சி ஜமால் முகமது கல்லூரிக்கு வருகை தந்திருந்தேன். தேசிய அளவிலான பால் பேட்மிண்டன் போட்டியை நான்தான் அந்த நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்தேன். அதுமட்டுமல்லாமல் அந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டு திருவெறும்பூர் தொகுதி சூரியூரில் இருக்கக்கூடிய ஜல்லிக்கட்டு அரங்கத்தோடு கூடிய `முதலமைச்சர் மினி ஸ்டேடியம்' அரங்கத்தையும் நானும் நம்முடைய அமைச்சர் பெருமக்களும் திறந்து வைத்தோம்.

#### கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்ஸ்

திருச்சியில் ஒலிம்பிக் அகாடமி அமைக்கின்ற பணிகளும் மிக வேகமாக நடைபெற்று வருகின்றன. தமிழ்நாடு முழுக்க உள்ள 12,500 கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஏற்கனவே கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்ஸ் திட்டத்தை வழங்கி வந்திருந்தோம். கிராமங்களில் அந்தத் திட்டத்திற்கு மிகப்பெரிய ஒரு வரவேற்பு கிடைத்தது.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கிராமப்புறங்களுக்கு மட்டும் கொடுத்தால் போதாது, நகர்ப்புற மக்களுக்கும் இந்தத் திட்டம் சென்றடைய வேண்டும் என்று எங்களுக்கு அறிவுறுத்தி இருந்தார். அதன்படி, அடுத்த கட்டமாக நகர்ப்புறத்தில் இருக்கக்கூடிய உள்ளாட்சி அமைப்புகளுக்கும் இந்த கிட்ஸ் வழங்கப்படும் என்று அறிவித்து, இதைத் தொடர்ந்து வழங்கி வருகிறோம்.

#### மிகப்பெரிய ஒரு வளர்ச்சி

இதன் தொடர்ச்சியாக, இன்றைக்கு திருச்சி மாவட்ட சுற்றுவட்டாரத்தில் இருக்கக்கூடிய 10 மாவட்டங்களில் இந்த ஸ்போர்ட்ஸ் கிட்டை வழங்க இருக்கின்றோம். நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில் விளையாட்டுத் துறை மிகப்பெரிய ஒரு வளர்ச்சியை அடைந்து கொண்டிருக்கிறது. நாம் விளையாட்டுத் துறைக்கு முக்கியத்துவம் கொடுக்கக் கொடுக்க, விளையாட்டில் புதிய வீரர்கள் உருவாகி வருகிறார்கள். விளையாட்டு வீரர்கள் உருவாவதுடன் மட்டுமல்லாமல், தொடர்ந்து அந்த விளையாட்டு வீரர்கள் தேசிய, சர்வதேச அளவில் சாதனைகள் படைத்து வருகிறார்கள். அதற்கு இந்த மேடை ஒரு மிகச்சிறந்த உதாரணம்.

சைக்கிளிங் வீரர் பிரதீப் சங்கராவும் பாரா அத்லெடிக் வீரர் மணிகண்டனும் இங்கு வந்திருக்கிறார்கள். இரண்டு பேருமே பல்வேறு தேசிய மற்றும் சர்வதேச அளவிலான போட்டிகளில் பதக்கங்களைக் குவித்து, நம்முடைய தமிழ்நாட்டிற்கும் இந்திய ஒன்றியத்திற்கும் பெருமை சேர்த்த மிகப்பெரிய இரண்டு வீரர்கள். அவர்களுக்கு நம்முடைய அரசு, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அனைத்து வகையிலும் என்றைக்கும் துணை நிற்பார். குறிப்பாக மாற்றுத்திறன் வீரர் தம்பி மணிகண்டன் அவர்கள் நம்முடைய எஸ்.டி.ஏ.டி மாணவர் என்பது நமக்கெல்லாம் கூடுதல் பெருமை.



#### அரசின் ஒரே இலக்கு

இங்கு அவர் பேசும் பொழுது நீங்களெல்லாம் கவனித்திருப்பீர்கள், அவரின் அனுபவங்களை இங்கே பகிர்ந்து கொண்டார். ஒட்டுமொத்த தன்னம்பிக்கையின் மறு உருவமாகத் தம்பி மணிகண்டன் அவர்கள் இங்கே அமர்ந்திருக்கிறார். அதேபோல விளையாட்டுத் துறையில் சாதிக்க நினைக்கின்ற பலருக்கு இவர்கள் இரண்டு பேரும் இன்றைக்கு ஊக்கமாக இருந்து வருகிறார்கள். இந்த நிகழ்ச்சிக்கு வந்திருக்கக்கூடிய உங்களில் இருந்தும் நிறையப் பிரதீப் சங்கராக்களும், நிறைய மணிகண்டன்களும் உருவாக வேண்டும் என்பதுதான் நம்முடைய அரசின் ஒரே இலக்கு.

நம்முடைய திராவிட மாடல் அரசின் முன்னெடுப்புகளால் விளையாட்டுப் போட்டிகளை வேடிக்கை பார்க்கின்ற இடத்திலிருந்து, இன்றைக்கு நம் தமிழ்நாட்டு விளையாட்டு வீரர்கள் அதில் பங்கேற்கின்ற இடத்திற்கு முன்னேறிக் கொண்டிருக்கிறோம். இப்படி விளையாட்டைத் தமிழ்நாடு முழுக்க பரவலாக்கி வருகின்றோம். நகரங்கள், கிராமங்கள் என எல்லா இடங்களிலும் இருந்தும் விளையாட்டு வீரர்கள் உருவாக வேண்டும். அதற்கான வாய்ப்பையும் வசதியையும் ஏற்படுத்தித் தர வேண்டிய பொறுப்பை நம்முடைய அரசு தொடர்ந்து நிறைவேற்றி வருகிறது.

#### முதலமைச்சர் கோப்பை போட்டி

தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதியிலிருந்தும், வெறும் நகர்ப்புறம் மட்டும் இல்லாமல், கிராமப்புறத்திலிருந்தும் வீரர்கள் உருவாக வேண்டும். திறமையான விளையாட்டு வீரர்களைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று நம்முடைய தமிழ்நாடு அரசு சார்பாக வருடந்தோறும் முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளையும் நடத்தி வருகிறோம். இன்றைக்குக் கொடுக்கப்படுகின்ற இந்த கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்டைப் பயன்படுத்தி நன்றாக விளையாடுகின்ற வீரர்கள், வீராங்கனைகளை முதலமைச்சர் கோப்பை போட்டிகளில் நாங்கள் கண்டறிகின்ற வாய்ப்பு நிச்சயம் கிடைக்கும். அப்படித் தேர்ந்தெடுக்கப்படுகின்ற வீரர்கள், வீராங்கனைகளுக்குச் சிறந்த பயிற்சியாளர்கள் மூலமாக முறையான பயிற்சிகளையும் நம் அரசு வழங்குகிறது.

நம்முடைய வீரர்கள் சர்வதேச, தேசியப் போட்டிகளில் பங்கேற்பதற்கு முன்பாகவே தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை மூலமாக அவர்களுக்குத் தொடர்ந்து தேவையான நிதி உதவிகளையும் செய்து வருகிறோம். வெற்றிபெற்று வந்துவிட்டால், உடனடியாக முதலமைச்சர் அவர்களே அழைத்து உயரிய ஊக்கத் தொகையை வழங்குகிறார்.

இப்படித் தமிழ்நாட்டிலிருந்து இந்தியாவின் தலைசிறந்த விளையாட்டு வீரர்களை உருவாக்கும் பணியைத் தொடர்ந்து நம்முடைய அரசு செய்து வருகிறது. அந்த வகையில் கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்ஸ் மூலமாக நம்முடைய அரசு விதைக்கின்ற விதை, தமிழ்நாடு முழுவதும் விளையாட்டு வீரர்களை உருவாக்கும் என்று எங்களுக்கு நிச்சயம் நம்பிக்கை இருக்கிறது.

#### 141 மினி ஸ்டேடியங்கள்

திராவிட மாடல் அரசு அமைந்த பிறகு, இந்த நான்கரை ஆண்டுகளில் மட்டும் 141 மினி ஸ்டேடியங்களைத் தமிழ்நாடு முழுக்கக் கட்டி முடித்துச் சாதனை படைத்திருக்கிறது நம்முடைய அரசு. முந்தைய பத்தாண்டு கால அ.தி.மு.க ஆட்சியில் விளையாட்டு உட்கட்டமைப்புக்கு அந்த அரசு ஒதுக்கிய நிதி எவ்வளவு தெரியுமா? மொத்தம் 380 கோடி ரூபாய். கடந்த ஐந்து ஆண்டு தி.மு.க ஆட்சியில், திராவிட மாடல் ஆட்சியில் நம்முடைய முதலமைச்சர் ஒதுக்கிய நிதி எவ்வளவு தெரியுமா? 600 கோடி ரூபாயை நம்முடைய அரசு ஒதுக்கி இருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், முதல்முறையாக 2024ஆம் ஆண்டு 100 விளையாட்டு வீரர்களுக்கு அரசு வேலைவாய்ப்புகளை நம் முதலமைச்சர் அவர்கள் உருவாக்கிக் கொடுத்திருக்கிறார். சமீபத்தில், சட்டமன்றத்தில் பேசும் பொழுது நான் குறிப்பிட்டுச் சொன்னேன், அடுத்த வருடம் குறைந்தபட்சம் 150 விளையாட்டு வீரர்களுக்கு அரசு வேலைவாய்ப்பைக் கொடுப்போம்.

#### 100 விளையாட்டு வீரர்கள்

பொதுவாக மற்ற பிள்ளைகள் படிக்கும் பொழுது, மற்ற பாடப்பிரிவுகளைப் படிக்கும் பொழுது அவர்களின் பெற்றோர்கள் ஊக்குவிப்பார்கள். ஆனால், விளையாட்டுப் பக்கம் செல்லும்போது மட்டும் பெற்றோர்களுக்குக் கொஞ்சம் வருத்தமாக இருக்கும். `இவன் விளையாடிக்கொண்டே தன் எதிர்காலத்தைப் பாழாக்கிக் கொள்கிறானே, இவனுக்கு ஒரு வேலைவாய்ப்பு கிடைக்காதே' என்று யோசிப்பார்கள். ஆனால் அதையும் நம்முடைய திராவிட மாடல் அரசு சரி செய்திருக்கிறது. சென்ற ஆண்டு கிட்டத்தட்ட 100 விளையாட்டு வீரர்களுக்கு அரசு வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறோம். இந்த வருடம் அடுத்த 10 நாட்களில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் 150 விளையாட்டு வீரர்களுக்கு, அரசு வேலைவாய்ப்பைக் கொடுக்க இருக்கிறார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான நம்முடைய திராவிட மாடல் அரசு தொடர்ந்து, அனைத்துத் துறையிலும் இன்றைக்குப் பல்வேறு விதத்தில் வளர்ச்சி அடைந்து வருகிறது. தொழில் வளர்ச்சி, மகளிர் முன்னேற்றம், கல்வி வளர்ச்சி, சுகாதாரம், விளையாட்டு எனத் தமிழ்நாடு இன்றைக்கு ஒரு ‘ஆல் ரவுண்டர்’ மாநிலமாக மாறியிருக்கிறது.

நம் அரசின் முயற்சிகளுக்குப் பல்வேறு திசைகளிலிருந்து அங்கீகாரங்கள் குவிந்து வருகின்றன. இந்த வளர்ச்சி மேலும் மேலும் அதிகரிக்க வேண்டும். அதற்கு உங்களுடைய ஆதரவு தொடர்ந்து இந்த அரசுக்கும் முதலமைச்சருக்கும் இருக்க வேண்டும்.

இந்த நேரத்தில் இந்த கிட்ஸை வாங்க வந்திருக்கக்கூடிய விளையாட்டு வீரர்கள் உங்களுக்கெல்லாம் ஒரேயொரு வேண்டுகோள். உங்களுக்குக் கொடுக்கப்படுகின்ற விளையாட்டு உபகரணங்களை முறையாகத் தயவு செய்து தொடர்ந்து பயன்படுத்துங்கள். பாதுகாப்பாக வைத்திருந்து, அவற்றை நல்ல முறையில் பராமரியுங்கள்.

கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்டைப் பயன்படுத்தி உங்கள் ஊரிலிருந்தும் நிறைய வீரர்கள் உருவாக என் வாழ்த்துகளைத் தெரிவித்து, இங்கு வந்திருக்கக்கூடிய அனைவருக்கும் என்னுடைய பாராட்டுகள் மற்றும் வாழ்த்துகளைத் தெரிவித்து, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பாராட்டிப் பேசினார்.

#### பங்கேற்றவர்கள்

அமைச்சர்கள் கே.என்.நேரு, அன்பில் மகேஷ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர் கவிதா, மாநகராட்சி ஆணையர் மதுபாலன் ஐ.ஏ.எஸ்., மாவட்ட வருவாய் அலுவலர் பாலாஜி, மாவட்டக் கழகச் செயலாளர் வைரமணி, ஜமால் முகமது கல்லூரியின் தாளாளர் மற்றும் செயலாளர் காஜா நஜிமுதீன், சைக்கிளிங் வீரர் பிரதீப் சங்கரா, பாரா அத்லெடிக் வீரர் மணிகண்டன் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.